Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 100/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | லோகநாதன் |
| Father's Name | – | லட்சுமண கவுண்டர் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 14th July 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது உடுமலைப்பேட்டையில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய தங்கையின் பெயர் லீலாவதி. ஆஜர் எதிரி அவரது கணவர் ஆவார். கடந்த 23 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்படி இருவருக்கும் திருமணம் நடந்தது. மேற்படி இருவரும் சேரன் தொழிலாளர் காலனி ஆச்சிபட்டியில் குடியிருந்து வந்தனர்.

27.03.2017 ம் தேதி காலையில் நானும், எனது மாமா இராமமூர்த்தியும் கோவைக்கு சென்றோம். பின்னர் மாலையில் என்னுடைய தங்கையின் வீட்டிற்கு வந்து, குழந்தைக்கு தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு உடுமலையில் உள்ள எனது வீட்டிற்கு எடுதது செல்லலாம் என நினைத்து, மேற்படி முகவரியில் உள்ள எனது தங்கையின் வீட்டிற்கு சென்றேன்.

வீடு பூட்டியிருந்தது. கதவை தட்டினேன். உள்ளே இருந்து கதவை திறந்தார்கள். அப்போது எனது தங்கையும், அவரது குழந்தைகளான கீத்திகாவும், நிரஞ்சன்குமாரும் அழுது கொண்டிருந்தார்கள். என்னுடைய தங்கையின் முகம் அடிப்பட்டதால் வீங்கி இருந்தது, இடது கையில் கீறியதால் இரத்தக்காயம் இருந்தது.

என்னவென்று கேட்டபோது, ஆஜர் எதிரி ரூ.5 இலட்சம் பணம் வாங்கி வருமாறு தன்னை அடிப்பதாக கூறினார். ஆஜர் எதிரி அங்கும் இங்குமாக கோவமாக நடந்து கொண்டிருந்தார். நான் பணம் வேண்டுமானால் என்னை கேட்கவேண்டியது தானே. ஏன் குழந்தைகளை அடித்தீர்கள் என்று கேட்டேன்.

நான் குழந்தைகளையும், எனது தங்கையும் அழைதது கொண்டு பொள்ளாச்சி அரசு மருததுவமனையில் எனது தங்கைக்கு முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு, உடுமலைப்பேட்டை அழைத்து சென்றுவிட்டேன். பின்னர் மறுநாள் காலை எனது தங்கை தாலூக்கா காவல்நிலையத்தில் புகார் அளித்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பொள்ளாச்சியில் இருந்து ஜல்லி பட்டி கிராமம் சுமார் 40 கி.மீட்டர் தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். 28.03.2017 அன்று என்னை என் தங்கை வரச் சொல்லியிருந்தார் என்றால் சரிதான். 28 ம் தேதி போகலாம் என்று இருந்தேன் என்றால் சரிதான், ஆனால் 27 ம் தேதி எனக்கு ஒரு வேலை இருந்ததால் நான் 27 ம் தேதி கோவை சென்று, பின் என் தங்கை வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான்.

நானும், எனது மாமா இராமமூர்த்தியும் சென்றதை போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் கோவை சென்று என் தங்கை வீட்டிற்கு வரும்போது மாலை 06.30 மணியிருக்கும் என்றால் சரிதான். நான் என் தங்கை வீட்டிற்கு செல்லும்போது என் தங்கையின் மகன் நிரஞ்சன்குமார் வீட்டில் இருந்தார் என்றால்

சரிதான்.

போலிசார் விசாரணையில் என் தங்கையின் குழந்தைகள் அழுது கொண்டிருந்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் அடிப்பட்டதால் எனது தங்கையின் முகம் வீங்கியிருந்தது என்றும், பின்னால் எனது தங்கையும் அவரது குழந்தைகளையும் அழைதது சென்றேன் என்றும், எனது தங்கைக்கு இடது கையில் கீறிய இரத்தக்காயம் இருந்தது என்றும், கன்னத்தில் அடித்து வீங்கி இருந்ததும் என்றும், என் தங்கை அவரது கணவர் 5 இலட்சம் பணம் வாங்கி வர சொல்லி அடித்ததாக கூறினார் என்பதையும் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

என் தங்கையினை அடித்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், என் தங்கை சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சம்பவம் குறித்து உடனடியாக காவல்நிலையம் சென்று புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். பொள்ளாச்சி அரசு மருத்துவமனை என் தங்கையினை அழைதது செல்லும்போது சுமார் இரவு 08.00 மணியிருக்கும் என்றால் சரிதான்.

பின்னிட்டு உடுமலைப்பேட்டை எனது வீட்டிற்கு அழைத்து சென்றேன் என்றால் சரிதான். மறுநாள் காலை சுமார் 11.00 மணியளவில் காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன் என்றால் சரிதான். புகாரினை நான் தட்டச்சு செய்து வந்து போலிசாரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

புகாரில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். என் தங்கையும் அவரது கணவரும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் தங்கையின் வீட்டிற்கு அருகில் வேறு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அருகில் இருந்த வீடுகளில் உள்ளவர்களுக்கு மேற்படி சம்பவம் குறித்து தெரியும் என்றால் சரிதான்.

சொன்ன தேதியில் சொன்ன இடத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும், எனது தங்கையின் கணவர் மீது அவருக்கு இருந்த கருத்து வேறுபாடு காரணமாக பொய்யாக புகார் அளித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.